**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

COS.No.38/2023 பெயர் : மகேஷ்குமார் நாள் : 03.07.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

முந்தைய விசாரணையின் போது பிரதிவாதி டையிங் பேக்டரியில் சந்திந்ததன் மூலம் பழக்கம் என்று கூறிய நிலையில், டையிங் என்பது நூலுக்கு சாயம் போடுவது என்றால், சரிதான். பிரதிவாதி பிரிண்டிங் செய்து வருகிறார், துணிகளுக்கு டிசைன் போடுவார். டையிங்-ம், பிரிண்டிங்-ம் வெவ்வேறு தொழில் என்றால், சரிதான். அதனால், பிரதிவாதிக்கு சம்மந்தமே இல்லாத டையிங் தொழிலில் நான் சந்தித்தாகவும், அதன் மூலம் பழக்கம் ஏற்பட்டு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால், சரியல்ல. டையிங் பேக்டரியில் எந்தவிதமான வரவு செலவும் கிடையாது என்று சொன்னால், எனக்கு தெரியாது, ஆனால் அவர் அங்கு வருவார். சுமார் 2020 முதல் அவரை எனக்கு தெரியும். பிரதிவாதிக்கு நான் கடன் கொடுத்த போது, என்ன தொழில் செய்கிறார், லாபம் வருகிறதா, நஷ்டம் வருகிறதா, வேறு சொத்துக்கள் உள்ளதா என்று விசாரித்தீர்களா என்றால், பிரிண்டிங் தொழில் செய்கிறார் என்பது மட்டும் தெரியும். 2022-ம் வருடம் நான் பணம் கொடுத்தபோது, அவர் தொழில் செய்த விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால், பணம் கொடுத்தபோது, பிரதிவாதி சொல்லி தான் எனக்கு தெரியும். வேறு எந்த விபரமும் நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. நீங்கள் விசாரிக்கவும் இல்லை, கடன் கொடுக்கவும் இல்லை என்றாலும், 2016-ம் வருடத்திலேயே அவர் தொழிலை நிறுத்தி விட்டார், வங்கி கணக்குகளையும் மூடிவிட்டார் என்றால், அதைப்பற்றி

எனக்கு தெரியாது, தொழில் செய்வதாக தான் அவர் சொன்னார். நான் அவ்வப்போது கடன் கொடுத்ததாக என் பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன், ஆனால் எப்போது, எவ்வளவு தொகை கொடுத்தேன் என்ற விபரம் எனக்கு தெரியாது. கடன் கொடுப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பு என்னிடம் கடன் கேட்டார். தேதி எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கடனை 1 மாதத்திற்குள் கொடுப்பதாக சொல்லியிருந்தார். என்னுடைய முதல் விசாரணையிலும், பிராதிலும் மேற்படி கடன் தொகையை 6 மாத தவணைக்குள் திருப்பி செலுத்தி விடுவதாக கூறியதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால், அவ்வாறு கூறவில்லை. கடனுக்காக 6 காசோலைகள் கொடுத்துள்ளார். 6 காசோலையும் ஒரே வரிசை எண் கொண்டது என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. 6 காசோலையிலும் ஒரே தேதி 20.10.2022 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். காசோலை எண்கள் ஒரே வரிசை எண் கொண்டது கிடையாது என்று சொன்னால், சரிதான். 6 காசோலைகளை 3 காசோலை புத்தகங்களில் இருந்து எடுக்கப்பட்டது என்றால், எனக்கு தெரியாது, அவர் தான் கொண்டு வந்து கொடுத்தார். 4 லட்சம் ரூபாய்க்காக எதற்காக 6 காசோலைகள் வாங்கினீர்கள் என்றால், சிறிது சிறிதாக கடன் தொகையை திருப்பி செலுத்தி விடுவதாக கூறினார். உண்மையில் கடன் பெற்றிருந்தால், ஒரே காசோலையில் கொடுத்திருப்பார் என்றாலும், நீங்களும், உங்கள் நண்பர் சசிகுமாரும் சேர்ந்து பொய்யான வழக்கிற்காக காசோலைகளை தயார் செய்துள்ளீர்கள் என்றால், சரியல்ல. போதிய பணம் இல்லாத காரணத்தினாலும், கணக்குகள் முடிக்கப்பட்ட காரணத்தினாலும் காசோலைகள் திருப்பப் பட்டன என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 முதல் 12 வரையிலான காசோலைகள் பிரதிவாதிகள் கணக்கு முடிக்கப்பட்டதாக திருப்பப்பட்டன என்றால், சரிதான். காசோலை திருப்பப்பட்டதற்கான சரியான காரணம் உங்களால் கூறமுடியாததற்கு பொய்யான வழக்கு தாக்கல் செய்ததால் தான் உங்களால் கூறமுடியவில்லை என்று

சொன்னால், சரியல்ல. காசோலை திருப்பப்பட்ட பிறகு அறிவிப்பு கொடுத்தீர்களா அல்லது காசோலை வழக்கு தாக்கல் செய்தீர்களா என்றால், இல்லை. பிரதிவாதி பணத்தை திருப்பி கொடுத்து விடுவதாக கூறியதால், மேற்படி நடவடிக்கைகளை நான் எடுக்கவில்லை. உண்மையில் பிரதிவாதி உங்களிடம் பணம் வாங்கி இருந்தால், நீங்கள் நடவடிக்கை எடுத்திருப்பீர்கள் என்றாலும், பிரதிவாதியின் சொத்தை அனுபவிக்க வேண்டிய கெட்ட எண்ணத்தில் நீங்களும், சசிகுமார் சேர்ந்து இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு காசோலைகளில் கண்ட தொகைகளை 12% வட்டியுடன் திருப்பி கொடுப்பதாக பிரதிவாதி கூறியிருப்பது பொய் என்று சொன்னால், சரியல்ல. நான் வருமான வரி 10, 15 ஆண்டுகளாக கட்டி வருகிறேன். தாவா கடன் தொகையை அதில் காட்டியுள்ளீர்களா என்றால், இல்லை. இந்த தொகை கணக்கில் காட்டப்படாத தொகை என்றால், சரியல்ல, சிறிது சிறிதாக சேர்த்து வைத்திருந்ததை கடனாக கொடுத்தேன். நீங்கள் பொய்யான கணக்கு என்பதால், வருமான வரி கணக்கில் கடனை நீங்கள் காட்டவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் சொன்ன தேதியில் பிரதிவாதி கடன் வாங்கவுமில்லை, காசோலை கொடுக்கவுமில்லை என்று சொன்னால், சரியல்ல. இந்த வழக்கில் கண்ட காசோலைகள் அனைத்தும் 02.05.2013-ம் தேதியில் என் நண்பர் சசிகுமார் என்பவரிடமிருந்து பிரதிவாதி ரூபாய் 4 லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றும், அந்த கடனை 2015-ம் ஆண்டில் திருப்பி செலுத்தி விட்டார் என்றும், அந்த கடனுக்காக பிணையமாக காசோலை கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. மேற்படி காசோலைகளை சசிகுமாரிடம் கேட்டபோது, வருமான வரி பிரச்சனை இருப்பதாகவும், பின்னிட்டு தருவதாகவும் கூறியிருந்தார் என்றால், சரியல்ல. சசிகுமாரும், பிரதிவாதியும் நெருங்கிய உறவினர்கள் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் மீண்டும் 2016-ம் ஆண்டு பிரதிவாதி ரூ.5 லட்சம் சசிகுமாரிடமிருந்து கடன்

பெற்றுக்கொண்டு, பிணையமாக 2 காசோலைகள் கொடுத்திருந்தார் என்றால், சரியல்ல. அதேபோல் அந்த கடனை 2016-ம் ஆண்டே திருப்பி செலுத்தி விட்டார் என்று சொன்னால், சரியல்ல. பிணையமாக கொடுக்கப்பட்ட காசோலையை திருப்பி கேட்டபோது, சசிகுமார் அதிக வட்டி கேட்டார் என்றால், சரியல்ல. அதை பிரதிவாதி கொடுக்க மறுத்ததால், இந்த வழக்கு காசோலைகளை வைத்து என் மூலம் ஒரு வழக்கும், சசிகுமாரே நேரடியாக முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.322/2020 என்ற வழக்கும், சசிகுமார் மனைவியின் சகோதரி கார்த்திகா சமூக நீதிமன்றத்தில் COS.36/2023 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால், சரியல்ல. மேற்கண்ட சங்கதிகள் அனைத்தும் எனக்கும், சசிகுமாருக்கும் நன்கு தெரியும் என்றால், சரியல்ல. பிரதிவாதியிடமிருந்து துர்லாபம் அடையவேண்டும் என்பதற்காக பொய்வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், சரியல்ல. 2016-ம் ஆண்டிலிருந்து பிரதிவாதி எந்தவித தொழிலும் செய்யவில்லை என்றாலும், வங்கி கணக்கை 29.03.2016-ம் வருடமே முடித்து விட்டார் என்றாலும், அதனால் 2022-ம் ஆண்டு பிரதிவாதி கடன் பெற்றுக் கொண்டு, காசோலை கொடுத்தார் என்பது பொய் என்று சொன்னால், சரியல்ல. எனவே தாவா செலவு தொகைகள் தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால், சரியல்ல.